கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

*முனைவர் மா. ராஜவேல்,* Ph.D.
*மக்கள் தொடர்பு அலுவலர்*
*கைப்பேசி:* ***94890 56730***

*தொலைபேசி:* ***0422 - 6611302***
*நிகரி:* ***0422 - 2431821***
*மின்னஞ்சல்:*pro@tnau.ac.in

---

*பெறுநர்,* *தேதி:* ***25.06.2025***
*ஆசிரியர்,*
*ஐயா,*

*கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.*

**வேளாண்மையில் புதிய கண்டுபிடிப்புகளுக்கான முனைவர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி - அக்ரி ஹேக்கத்தான் 2025**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித்தொழில்நுட்பவியல் மையம் இன்று, 25.06.2025 “அக்ரி ஹேக்கத்தான் 2025” என்ற கருத்தரங்கத்தை வெற்றிகரமாக நடத்தியது. தமிழ்நாடு அரசால் “வேளாண்மையில் புதிய கண்டுபிடிப்புகளுக்கான முனைவர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி” என்ற பெயரில் தொடங்கப்பட்ட இம்முயற்சி, விவசாயிகள் எதிர்கொள்ளும் மிக அவசரமான பிரச்சனைகளுக்கு புதுமையான தீர்வுகளைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தக் கருத்தரங்கு, ஆராய்ச்சி அடிப்படையிலான தீர்வுகளைக் கண்டறிவதில் முக்கிய கவனம் செலுத்தியது.

தமிழ்நாடு வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2025-26 இல் அறிவிக்கப்பட்ட அக்ரி ஹேக்கத்தான் 2025, குறிப்பிட்ட பிராந்திய விவசாயப் பிரச்சனைகளைத் தேர்ந்தெடுத்து, தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஆராய்ச்சி மற்றும் நிதி பெறுவதற்கான நிலையான தீர்வுகளைக் கண்டறிவதில் கவனம் செலுத்துகிறது. இந்நிகழ்வில் தமிழ்நாடு மாநில வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகளின் அதிகாரிகள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப இயக்குநர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள், கோவையில் உள்ள தேசிய ஆராய்ச்சி நிறுவனங்களான ICAR கரும்பு இனப்பெருக்க நிறுவனம், ICFRE வன மரபியல் மற்றும் மர இனப்பெருக்க நிறுவனம், ICAR மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம் – மண்டல மையம் ஆகியவற்றின் மூத்த விஞ்ஞானிகள் கலந்துகொண்டனர்.

பயிர் மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித்தொழில்நுட்பவியல் மையத்தின் இயக்குநர் முனைவர் என். செந்தில், நிகழ்வின் கட்டமைப்பை விளக்கினார். விவசாயத்தில் உள்ள முக்கியப் பிரச்சனைகளை கணக்கெடுப்புகள், கருத்துகள் மற்றும் விவாதங்கள் மூலம் அடையாளம் காண்பதன் முக்கியத்துவத்தை அவர் எடுத்துரைத்தார். தொழில்நுட்ப இயக்குனர்களான  தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மைய இயக்குனர் முனைவர் ரா. ரவிகேசவன், பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர் முனைவர். மூ. சாந்தி, பயிர் மேலாண்மை இயக்குனர் முனைவர். எம்.கே.கலாராணி, தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய

முதன்மையர் (பொறுப்பு) முனைவர். கே. வெங்கடேசன், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் அ. ரவிராஜ், வேளாண் விரிவாக்கம் மற்றும் ஊரகவியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் ச.கார்த்திகேயன் ஆகியோர்களால் நடத்தப்பட்ட வேளாண் பிரச்சனைகளை கண்டறியும் அமர்வு, பயிர் மேம்பாடு, பயிர் பாதுகாப்பு, பயிர் மேலாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல் மற்றும் வேளாண் சந்தைப்படுத்தல் போன்ற துறைகளில் உள்ள பிரச்சனை அறிக்கைகளைப் பட்டியலிட்டு முன்னுரிமை அளிப்பதில் கவனம் செலுத்தினா்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் உயிரித்தொழில்நுட்பவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஈ. கோகிலாதேவி அவர்கள், வேளாண் ஆராய்ச்சியை விவசாயிகள் எதிர்கொள்ளும் நிஜ உலகப் பிரச்சனைகளுடன் இணைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். விவசாயத் துறையில் உள்ள பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொள்ள பல்துறை அணுகுமுறையின் தேவையை அவர் சுட்டிக்காட்டினார்.

ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் மு. ரவீந்திரன், விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு இடையேயான பல்துறை ஒத்துழைப்பு, வெற்றிகரமான நடைமுறை மற்றும் அளவிடக்கூடிய தீர்வுகளைக் கண்டறிவதற்கு முக்கியமானது என்பதை எடுத்துரைத்தார். ஆராய்ச்சி, விவசாயிகளுக்குச் செயல்படக்கூடிய முடிவுகளாக மாறக்கூடிய சூழலை வளர்ப்பதற்கு, பல்வேறு விவசாய களங்களில் புதுமை மற்றும் ஒருங்கிணைப்பு தேவை என்பதை அவர் வலியுறுத்தினார்.

பதிவாளரும், தற்காலிகத் துணைவேந்தருமான முனைவர் ஆர். தமிழ்ச்செல்வன், அக்ரி ஹேக்கத்தான் போன்ற நிகழ்வுகள் விவசாய சமூகத்தின் மேம்பாட்டிற்கு எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதை விளக்கினார். விவாதத்திற்கான முக்கிய கருப்பொருட்களில் காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள், வேளாண் இயந்திரமயமாக்கல், நீர் பாதுகாப்பு, வேளாண் சந்தைப்படுத்தல் மற்றும் உயிரியல் மற்றும் உயிரியல் அல்லாத அழுத்தங்கள் ஆகியவை அடங்கும்.

இந்த நிகழ்வின் நோக்கம், பிரச்சனைகளை அடையாளம் கண்டு, அவற்றுக்கு முன்னுரிமை அளித்து, சாத்தியமான, பயனுள்ள தீர்வுகளை வழங்குவதற்கான திட்ட முன்மொழிவுகளைக் கோருவதாகும். இந்த அக்ரி ஹேக்கத்தான் 2025-க்கு தமிழ்நாடு அரசால் ஒதுக்கப்பட்ட நிதி, விவசாயிகளுக்குத் தெளிவான மேம்பாடுகளை உறுதிசெய்யும் சிறந்த தீர்வுகளைச் செயல்படுத்த பயன்படுத்தப்படும். இந்நிகழ்வின் முடிவில், பயிர் மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித்தகவல் உயிரியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எல். அருள் நன்றியுரை கூறினார். இந்நிகழ்வை ஏற்பாடு செய்த அனைத்துப் பல்கலைக்கழகத் துறை அதிகாரிகள் மற்றும் மாநிலத் துறை அதிகாரிகளின் ஆதரவை அவர் பாராட்டினார். வரையறுக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பிரச்சனை தீர்க்கும் மற்றொரு முறையாக ஹேக்கத்தான் நிகழ்வுகள் உருவாகி வருகின்றன.

**மக்கள் தொடர்பு அலுவலர்**